
நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்
RNI-TNTAM/2023/88253

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com




| Vol: 02 | Issue: 37 | 4 Pages | 6.9.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 37 | 4 பக்கங்கள் | 6.9.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**செயிரின் தலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்**
**உயிரின் தலைப்பிரிந்த ஊன்**

**விளக்கம்:**
குற்றத்திலிருந்து நீங்கிய அறிவை உடையவர், ஓர் உயிரினிடத்திலிருந்து பிரிந்து வந்த ஊனை உண்ணமாட்டார்.

# ஒரு நிமிட பட்டா திட்டம்: பத்திரப்பதிவின்போதே இனி உடனடி பட்டா: தமிழக அரசு நடவடிக்கை






சென்னை. செப். 6

தமிழக அரசு பொதுமக்களின் வசதிக்காக பத்திரப்பதிவின் போதே உடனடியாக பட்டா பெயர் மாற்றம் செய்து வழங்கும் ஒரு நிமிட பட்டா திட்டத்தை (தானியங்கி பட்டா) நடைமுறைப்படுத்தி உள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் நகர் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களை பத்திரப்பதிவின் போதே பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

ஆனால் கிராமங்களில் நத்தம் என வகைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளுக்கு உடனடியாக பட்டா வழங்கப்படவில்லை. இந்த நிலையில் ஒரு நிமிட பட்டா திட்டத்தை, தமிழக அரசு விரிவாக்கம் செய்து உள்ளது.

அதற்காக பத்திரப்பதிவுத்துறை சர்வரில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளன. அதன் மூலம் இனி, கிராமங்களில் உள்ள வீடுகளை பத்திரப்பதிவு செய்யும் போதே உடனடியாக பட்டா பெயர் மாற்றம் செய்யப்படும் பணி தொடங்கிவிட்டது.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தமிழக அரசின் உத்தரவு காரணமாக பத்திரப்பதிவு செய்யும் போதே பட்டா மாற்றம் செய்யும் பணிகள் முழு அளவில் நடந்து வருகிறது.

உட்பிரிவு செய்ய தேவையில்லாத நிலங்களை பத்திரப்பதிவு செய்யும் போதே உடனடியாக பட்டா மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அரசின் வருவாய்த்துறை, கிராமப்புறங்களில் உள்ள நத்தம் குடியிருப்பு பட்டா விவரங்களை பொதுமக்கள் எளிதாக பார்க்கும் வகையில் https://eservices.tn.gov.in/eservicesnew/ home.html என்ற இணையதளத்தை மேம்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் உள்ள 317 தாலுகாக்களில் 17 தாலுகாக்கள் முற்றிலும் நகர்புறத்தில் உள்ளது. இது தவிர மீதமுள்ள 300 தாலுகாவில் முதல்கட்டமாக 220 தாலுகாக்களில் நத்தம் குடியிருப்பு பகுதிகளின் பட்டா விவரங்களை பார்வையிடலாம்.

இந்த இணையதளம், பத்திரப்பதிவு துறை சர்வரில் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது. எனவே தற்போது 220 தாலுகாவில் உள்ள நத்தம் குடியிருப்புகளை பத்திரப்பதிவு செய்யும் போதே இனி பட்டா பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை சோதனை அடிப்படையில் கொண்டுவரப்பட்டது. இன்று (நேற்று) முதல் பட்டா பெயர்மாற்றம் செய்யும் பணிகள் தடங்கலின்றி நடக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பொதுமக்கள் கவனத்திற்கு...

தமிழக அரசின் இந்த திட்டத்தை பொதுமக்கள் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே பத்திரப்பதிவு செய்யும் போதே, அதன் உரிமையாளர் பெயரில் பட்டா இருக்கிறதா என்பதனை மக்கள் முதலில் சரி பார்க்க வேண்டும்.

அப்படி அவர்களது பெயரில் பட்டா இல்லாவிட்டால், முதலில் அவர்களை பட்டா மாற்றி வாருங்கள் என்று கூறவேண்டும்.

அதன்மூலம் அவர்களது பெயரில் பட்டா வந்து விட்டால், நாம் கிரையம் செய்யும்போது நமது பெயருக்கு பட்டா எளிதாக மாறி விடும். ஒருவேளை அதனை நாம் கவனிக்காவிட்டால், அதன் பிறகு பட்டா மாற்றும் பணியினை நாம் தான் மேற்கொள்ள வேண்டும்.

## வடகொரிய வெள்ளத்தில் 1000 பேர் பலி.. கடமை தவறிய 30 அரசு அதிகாரிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றம்?



வடகோரியா, 6

கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் சுமார் 1,000 பேர் உயிரிழந்தனர்

வெள்ளபாதிப்புகளைத்தடுக்கத்தவறிய அதிகாரிகளைக்கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிபர் கிம் உத்தரவிட்டிருந்தார்

வடகொரியாவில் கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் சுமார் 1,000 பேர் உயிரிழந்த நிலையில், அதை தடுக்கத் தவறிய 30 அரசு அதிகாரிகளுக்கு அதிபர் கிம் ஜாங் உன் உத்தரவுப்படி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் 4,100 வீடுகள், 7,410 விவசாய நிலங்கள், அரசு கட்டடங்கள், சாலைகள் மற்றும் ரெயில்வே லைன்கள் என அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கின. இந்தபாதிப்புகளில்சிக்கி1000பேர்உயிரிழந்துள்ளதாகக்கூறப்படுகிறது. வட மேற்கு பகுதிகளில் உலா சின்உய்ஜூ[Sinuiju], உய்ஜூ Uiju உள்ளிட்ட நகரங்களின் அதிக அழிவுகள் நிகழ்ந்துள்ளன. வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட கிம் ஜாங் உன் அவ்விடங்களை மீண்டும் கட்டியெழுப்ப பல மாதங்கள் ஆகும் என்று தெரிவித்தார். மேலும் வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட 15,400 பேருக்கு தலைநகர் பியோங்யாங்கில் அரசாங்கம் தற்காலிக தங்குமிடம் வழங்கியுள்ளது.

இந்த வெள்ள பாதிப்புகளைத் தடுக்கத் தவறிய அதிகாரிகளைக் கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிபர் கிம் உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் அதிபரின் உத்தரவுப்படி கடந்த மாத இறுதியில் ஊழல் மற்றும் கடமை தவறிய அரசு அதிகாரிகளாக 30 பேர் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக தென்கொரியாவின் சோசன் டிவி உள்ளிட்ட ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வரும் நிலையில் வட கொரியா தரப்பில் எதுவும் கூறப்படவில்லை. முன்னதாக வட கொரிய வெள்ளத்தில் அதிக மக்கள் உயிரிழந்துள்ளதை மறுத்த அதிபர் கிம் ஜாங் உன் இவை வட கொரியாவின் சர்வதேச பிம்பத்தைச் சிதைக்கத் தென் கொரியா பரப்பும் வதந்திகள் என்று மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சிகாகோ கடற்கரையில் சைக்கிள் ஓட்டி மகிழ்ந்த முதல்வர்



சென்னை, செப். 6

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் முதலீடுகளையும், வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்காவுக்கு அரசு முறை பயணம் சென்றுள்ளார். சான்பிரான்சிஸ்கோவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன, இதன் மூலம் மொத்தம் ரூ.1,300 கோடி முதலீட்டில் 4,600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், கூகுள் நிறுவனத்தின் வாயிலாக 20 லட்சம் இளைஞர்களுக்கு அதிநவீன செயற்கை நுண்ணறிவு திறன் வளர்ச்சியுடன் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சான் பிரான்சிஸ்கோ விலிருந்து சிகாகோ வந்தடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, சிகாகோவிற்கான துணைத் தூதர் சோம்நாத் கோஷ் மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

இந்நிலையில் அமெரிக்காவின் சிகாகோ கடற்கரை பகுதியில் சைக்கிள் ஓட்டி உடற்பயிற்சியில் ஈடுபட்ட வீடியோவை எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "புதிய கனவுகளுக்கான களம் அமைக்கும் மாலையின் பேரமைதி" என பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சிகாகோவில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்க உள்ளார்.

## சென்னையில் சைக்கிள் பாதைகள் எங்கே? முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு அன்புமணி ராமதாஸ் கேள்வி




சென்னை, செப். 6

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் முதலீடுகளையும், வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்காவுக்கு அரசு முறை பயணம் சென்றுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் சிகாகோ கடற்கரையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பாட்டு பாடியபடி சைக்கிளில் பயணம் செய்தார்.

இது தொடர்பான வீடியோவை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்த நிலையில், சென்னையில் சைக்கிள் பாதைகள் எங்கே? என முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

சென்னையில் மாநில அரசுத் திட்டங்களின்படியும், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்படியும் சென்னையின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த சைக்கிள் பாதைகளையும் காணவில்லை;

வாடகைக்கு விடுவதற்கான ஸ்மார்ட் சைக்கிள்களையும் காணவில்லை. அவை எப்போது மீண்டும் பயன்பாட்டுக்கு வரும்? . என தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை மாவட்டத்தை உலுக்கிய இளைஞர் கொலை வழக்கு: 5பேர் கைது




மானாமதுரை:செப்.06

சிவகங்கை மாவட்டத்தை உலுக்கிய மானாமதுரை இளைஞர் கொலை வழக்கில் 5 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகில் உள்ள கீழப்பசளை கிராமத்தைச் சேர்ந்த ராஜா என்பவரின் மகன் பிரவீன்(17) என்ற இளைஞர் தலைதுண்டித்து கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் 5 பேரை மானாமதுரை காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டோங்கரே ப்ரவீன் உத்தரவின் பேரில் மானாமதுரை காவல்துறை துணை கண்காணிப்பாளர் நிரேஷ் தலைமையில் ஆய்வாளர் சரவ ணக்குமார் மற்றும் சிறப்பு ஆய்வாளர் நாகராஜ் உடன் காவலர்கள் குற்றவாளிகளை விரைந்து கைது செய்து சிறையில் அடைத்தனர். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் ஏற்பட்ட சிறு பிரச்சினை வாக்கு வாதம் முற்றி இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் வேலை செய்த சங்கமங்கலம் கிராமத்தை சேர்ந்த சசிக்குமார் என்ற இளைஞரின் கை துண்டிக்கப்பட்டது, இதன் தொடர்ச்சியாக கீழப்பசளை கிராமத்தை சேர்ந்த இளைஞர் பிரவீன் கொலை செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர், கைதானவர்கள் மானாமதுரை சங்கமங்கலம் கிராமத்தை சேர்ந்த சசிகுமார்(23) தனுஷ்(21) சண்முகம்(23) சுதர்சன் (எ) சூசை(22) மற்றும் ரகுபதி(20) ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர், சிவகங்கை மாவட்டத்தையே உலுக்கிய இந்த கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை காவல்துறையினர் விரைந்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## உடல் பருமன் டு பாடி பில்டிங்.. பிரேசிலின் 19 வயதே ஆன பாடி பில்டர் பிரபலம் மாரடைப்பால் உயிரிழப்பு



பிரேசில், செப். 6

பிரேசிலை சேர்ந்த 19 வயது பாடி பில்டர் மத்தேயூஸ் பாவ்லக் மாரடைப்பால் உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரேசில் நாட்டை சேர்ந்த வளர்ந்து வரும் பாடி பில்டிங் நட்சத்திரமான இருந்து வந்த மத்தேயூஸ் பாவ்லக் [Matheus Pavlak] 19 வயதிலேயே பயிற்சியின் மூலம் தேர்ந்த பாடி பில்டருக்கான உடல் வாகுவை கொண்டிருப்பதைக் கண்டு அனைவரும் ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தனர். 5 வருடங்களுக்கு முன்னர் நடந்த உடல் பருமன் கொண்டவர்கள் எடையை குறைக்கும் போட்டியில் பங்கெடுத்த மத்தேயூஸ் அதிலிருந்த்து தனது பாடி பில்டிங் ஆர்வத்தை பெற்றார்.

பிரேசிலில் நடந்த பல்வேறு பாடி பில்டிங் போட்டிகளில் பங்கேற்று புகழை சம்பாதித்த மத்தேயூஸ் பிரேசிலின் சாண்டா காத்ரீனா மாகாணத்தில் உள்ள தனது வீட்டில் வைத்து கடந்த ஞாயிறு மதியம் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். மத்தேயூசின் மரணம், உடலை அசாதாரணமாக மாற்ற பாடி பில்டிங் பயிற்சியில் பயன்படுத்தப்படும் அனபாலிக் ஸ்டெராய்ட்களின் [ஊக்கமருந்துகளின்] பாதுகாப்புத் தன்மைமீதானசந்தேகங்களைஎழுப்பியுள்ளது. மத்தேயூசும் இவ்வளவு இளம்வயதில் அவரின் அசாதாரண உடல்வாகைப் பெற இதுபோன்ற ஸ்டெராய்ட்களை பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.




விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்டவளாகத்தில் இருந்து கண்தான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக்சிவாச் துவக்கிவைத்தார். நிர்வாகிக்கள் M.சரவணன். M. இராஜா. கிருஷ்ணமூர்த்தி.ஆர்.சுரேஷ், அ.முரளிதரன், K.வெங்கடேசன். குபேரன் தனபால். டாக்டர்கள். கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜ். மற்றும் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மாவட்ட நிர்வாகி M.பாபு செல்வதுரை, ஆகியோர் பங்கேற்றனர். சுமார் 500 கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

# விநாயகர் சதுர்த்தி தொடர் விடுமுறையை முன்னிட்டு 2,315 சிறப்பு பஸ்கள்




சென்னை, செப். 6
விநாயகர் சதுர்த்தி, வார விடுமுறையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 2,315 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுவதாக அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் அறிவித்து உள்ளது. இது குறித்து தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

விநாயகர் சதுர்த்தி மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு 6ந்தேதி (வெள்ளிக்கிழமை) சுபமுகூர்த்தம், 7ந்தேதி (சனிக்கிழமை) விநாயகர் சதுர்த்தி, 8ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) வார விடுமுறை நாள் என தொடர் விடுமுறை நாட்கள் வருவதால் 5, 6 மற்றும் 7ந் தேதிகளில் சென்னையில் இருந்தும் மற்றும் பிற இடங்களில் இருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு போக்குவரத்துக்கழகங்கள் தினசரி இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்க திட்டமிட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 5, 6 மற்றும் 7ந் தேதிகளில் ஆயிரத்து 30 பஸ்களும், மற்றும் 8ந் தேதி கிளாம்பாக்கத்தில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு 725 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 6 மற்றும் 7ந்தேதிகளில் 192,3150 பஸ்களும், மாதாவரத்தில் இருந்து 6 மற்றும் 7ந் தேதிகளில் 20 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கும் 350 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# ஓட்டல் உரிமையாளரை ஷூவை கழட்டி அடிக்க பாய்ந்த சிறப்பு காவல் ஆய்வாளர் பணியிடை நீக்கம்



தருமபுரி, செப். 6
தருமபுரி நேதாஜி பைபாஸ் சாலையில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனைக்கு உள் நோயாளிகள், வெளி நோயாளிகள் என தினந்தோறும் 3000க்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். இங்கு புறக்காவல் நிலையம் அமைந்துள்ளது.

இந்த போலீஸ் நிலையத்தில் போலீசார் சுழற்சி முறையில் பணி செய்து வருகின்றனர். இந்த நிலையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியும் சிறப்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் காவேரி தினமும் மருத்துவமனைக்கு எதிரே உள்ள ஓட்டலில் உணவு சாப்பிடுவது வழக்கம். அவ்வாறு சாப்பிடும் உணவிற்கு கையில் உள்ள பணத்தை கொடுத்து விட்டு மீதியை பின்பு தருகிறேன் என கூறிவிட்டு சென்று விடுவார் என கூறப்படுகிறது.

இதேபோன்று நேற்று சாப்பிட்ட உணவிற்கு பணம் கொடுக்காமல் பின்பு தருவதாக கூறி உள்ளார். அதேபோல் மாலை உணவு சாப்பிட வந்த காவேரி உணவை சாப்பிட்டுவிட்டு சென்றபோது கடை உரிமையாளர் முத்தமிழ் நேற்று சாப்பிட்ட உணவிற்கும் சேர்த்து பணம் கேட்டு உள்ளார். இதனால் கோபமடைந்த சிறப்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் காவேரி முத்தமிழை தகாத வார்த்தையால் பேசியதாக கூறப்படுகிறது.

மேலும் பணத்தை தூக்கி வீசிவிட்டு கொலை மிரட்டல் விடுத்ததாக தெரிகிறது. மேலும் ஆத்திரமடைந்த சிறப்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் காவேரி தனது காலில் அணிந்திருந்த ஷூவை கழற்றி அடிக்க சென்ற சி.சி.டி.வி. வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து கடை உரிமையாளரை தொடர்பு கொண்டு பேசியபோது அவர் கூறியதாவது:

தினமும் சிறப்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் எங்களது ஓட்டலில் உணவு சாப்பிட வருவது வழக்கம். இவர் உணவு சாப்பிட்டு விட்டு பாக்கி வைத்து விட்டு சென்று விடுவார். மேலும் சாப்பிட்ட உணவிற்கு முழு தொகையை தராமல் கையில் இருப்பதை மட்டும் கொடுத்துவிட்டு செல்வார்.

நேற்று முன்தினம் சாப்பிட்ட உணவிற்கும் சேர்த்து பணம் கேட்டதற்காக தகாத வார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்து காலில் அணிந்திருந்த ஷூவை கழற்றி என்னை தாக்க வந்தார்.

இது குறித்து தருமபுரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டிடம் புகார் மனு அளிக்க உள்ளேன் என தெரிவித்தார்.

இந்நிலையில் சிறப்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ஷூவை கழற்றி ஓட்டல் உரிமையாளரை தாக்க முயன்ற சி.சி.டி.வி. காட்சி வெளியானதை அடுத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மகேஸ்வரன் உத்தரவின்பேரில் தருமபுரி உதவி போலீஸ் சூப்பிரண்டு சிவராமன் விசாரணை நடத்தினர்.

சிறப்பு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் காவேரியை பணியிடை நீக்கம் செய்து எஸ்பி மகேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# நெல்லை தொழிலாளியின் புது முயற்சி களிமண்ணால் ஆன விதை விநாயகர் சிலைகள்



நெல்லை, செப். 6
விநாயகர் சதுர்த்தி விழா நாளை 7ந்தேதி (சனிக்கிழமை) கொண்டாடப்படுகிறது.

இந்தவிழாவையொட்டி ஆண்டுதோறும் நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டை கிருபா நகரில் 3 அடி முதல் 12 அடி வரையிலும் விநாயகர் சிலைகளை வட மாநில தொழிலாளர்கள் தயாரித்து விற்பனை செய்வார்கள். அவ்வாறு தயார் செய்யப்படும் சிலைகள் இந்து முன்னணி உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் மூலம் வாங்கி பிரதிஷ்டை செய்து அவற்றை தாமிரபரணி ஆற்றில் கரைப்பார்கள்.


இவ்வாறு தயாரிக்கப்படும் சிலைகள் ரசாயன கலவை மிகுந்ததாக இருப்பதால் அவற்றை ஆற்றில் கரைக்கும்போது நீர் மாசுபடுகிறது என்று கூறி சமீப காலமாகவே மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் கலவையால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை தயாரிக்கக்கூடாது மற்றும் அதனை பிரதிஷ்டை செய்யக்கூடாது. அதனை ஆற்றில் கரைக்க அனுமதி இல்லை என்று இந்த ஆண்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் தயாரிக்கப்படும் விநாயகர் சிலைகளுக்கு மவுசு அதிகரித்துள்ளது. அந்த வகையில் களிமண்ணால் ஆன விதை விநாயகர் சிலைகளை தயார் செய்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் முயற்சியிலும், மரங்களை உருவாக்கும் முயற்சியிலும் இறங்கி இருக்கிறார் நெல்லை வண்ணார்பேட்டையை சேர்ந்த 63 வயதான மண்பாண்ட தொழிலாளி வேல்முருகன்.

இவர் ஒவ்வொரு பண்டிகை காலங்களுக்கும் ஏற்றார் போல் களிமண்ணில் பல்வேறு வேலைப்பாடுகளை செய்து வருகிறார். சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக மண்பாண்ட தொழிலில் ஈடுபட்டு வரும் இவர் தற்போது களிமண்ணில் நாவல் மரம் மற்றும் நெல்லிக்காய் மரத்தின் விதைகளை வைத்து களிமண்ணால் ஆன விநாயகர் சிலைகளை உருவாக்கி வருகிறார்.

இதன் மூலம் சுற்றுப்புற சூழலில் எந்தவித எதிர்மறையான தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இந்த சிலைகளில் நாவல் மற்றும் நெல்லிக்காய் விதைகளை உள்ளே வைத்து தயாரிப்பதால் இந்த வகை சிலைகளை கரைக்கும்போது அந்த விதைகள் ஆற்றங்கரை ஓரங்களில் விழுந்து முளைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த சிலைகள் ரூ.100ல் இருந்து ரூ.1,000 வரை விலை போவதாகவும், இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் இந்த சிலைகளுக்கு வரவேற்பு இருப்பதாகவும் வேல்முருகன் கூறினார். பண்டிகை நெருங்கி வரும் நிலையில் இவரது களிமண்ணால் ஆன விநாயகர் சிலைகளின் விற்பனை அமோகமாக இருக்கிறது.

# கன்னியாகுமரியில் 3வதுநாளாக நீடிக்கும் கடல் சீற்றம்: சுற்றுலாப் பயணிகளுக்கு தடை



கன்னியாகுமரி, செப். 6
கன்னியாகுமரி கடலில் அமாவாசை, பவுர்ணமி போன்ற நாட்களில் கடல் உள்வாங்குவது, கடல் நீர் மட்டம் தாழ்வது, உயர்வது, கடல் சீற்றம், கொந்தளிப்பு, ராட்சத அலைகள் ஆக்ரோஷமாக எழும்பி வீசுவது, அலையே இல்லாமல் கடல் அமைதியாக குளம்போல் காட்சியளிப்பது, கடல் நிறம் மாறுவது போன்ற பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

அதன்படி அமாவாசை முடிந்த 3வது நாளான இன்று காலை முதல் கன்னியாகுமரி கடல் உள்வாங்கி நீர்மட்டம் தாழ்ந்து காணப்பட்டது.

விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள வங்க கடல் பகுதியில் இந்த நிலை காணப்பட்டது. அதேவேளையில் இந்திய பெருங்கடல் மற்றும் அரபிக்கடல் பகுதியில் கடல் கொந்தளிப்புடனும் சீற்றமாகவும் காணப்பட்டது. ராட்சத அலைகள் ஆக்ரோஷமாக எழும்பி வீசின.

இதனால் கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு காலை 8 மணிக்கு தொடங்கப்பட வேண்டிய படகு போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் கடற்கரைக்குச் செல்ல போலீசார் தடை விதித்தனர். தடையை மீறி கடலில் இறங்கியவர்களை சுற்றுலா போலீசார் வெளியேற்றினர்.

பகல் 11 மணிக்கு கடல் சகஜ நிலைக்கு திரும்பியதை தொடர்ந்து 3 மணி நேரம் தாமதமாக விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு படகு போக்குவரத்து தொடங்கியது.

அதைத் தொடர்ந்து சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் படகில் பயணம் செய்து விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டு வந்தனர்.

# சேலம் அருகே பட்டாசு ஆலையில் தீ விபத்து தொழிலாளி பலி



சேலம், செப். 6
சேலம் மாவட்டம் வீராணம் அருகே உள்ள கோமாளி வட்டம் பகுதியை சேர்ந்தவர் ஜெயக்குமார் (50). இவர் வெள்ளியம்பட்டி காட்டுவளவு பகுதியில் அரசு அனுமதி பெற்று பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். அதே பகுதியில் தனித்தனியாக 5 இடங்களில் பட்டாசு ஆலை சிறிய அளவில் வைத்து நடத்தி வருகிறார்.

இந்த ஆலையில் நாட்டு வெடி உள்ளிட்ட அனைத்து விதமான மத்தாப்பூ மற்றும் வெடிகளும் தயாரிக்கப்படுகிறது. வழக்கம் போல இன்று பட்டாசு ஆலையில் சிலர் பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்பொழுது பட்டாசு மருந்து மூட்டையை கீழே இறக்கியபோது ஏற்பட்ட உரசலில் திடீரென வெடித்து தீ விபத்து ஏற்பட்டது. இந்த சத்தம் அருகில் இருந்தவர்களுக்கு கேட்டது.

இதையடுத்து உடனடியாக அருகில் இருந்தவர்கள் சென்று பார்த்தபோது அங்கு தீக்காயத்தில் இருந்தவர்களை மீட்க முயற்சி செய்தனர். மேலும் இதுகுறித்து வீராணம் போலீசாருக்கும், வாழப்பாடி தீயணைப்பு துறைக்கும் தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் படுகாயம் அடைந்த சிவகாசி பகுதியை சேர்ந்த ஜெயராமன் (55), சின்னனூர் பகுதியை சேர்ந்த கார்த்தி (30), முத்துராஜ் (29), சுரேஷ் ஆகிய 4 பேரை சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் பட்டாசு வெடித்த ஆலை முழுவதும் தண்ணீரை ஊற்றி பீச்சு அடித்து தீயைகட்டுக்குள்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியில் சிவகாசி பகுதியை சேர்ந்த ஜெயராமன் என்பவர் உயிரிழந்தார்.

போலீசாரின் விசாரணையில் ஜெயராமன் பட்டாசு மருந்து மூட்டையை கீழே இறக்க முற்படும்போது ஏற்பட்ட உரசலில் மருந்து வெடித்து சிதறியது தெரிய வந்தது. தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சூலூர் அருகே தனியார் கார் நிறுவனத்தில் தீ விபத்து



கோவை. செப். 6
கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ள ரங்கநாதபுரம் மெயின் ரோட்டில் கார் விற்பனை நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. கோவை சிவானந்தா காலனியைச்சேர்ந்த பிரவீன்குமார் என்பவர் இந்த நிறுவனத்தை கடந்த 10 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.

இந்த நிறுவனத்தில் புதிய கார்கள் விற்பனை மற்றும் பழைய கார்களுக்கு பழுது பார்க்கும் பணி உள்ளிட்ட பணிகள் நடந்து வருகிறது.

நேற்று இங்கு 70க்கும் மேற்பட்ட கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இரவு பணி முடிந்து ஊழியர்கள் நிறுவனத்தை பூட்டிச் சென்றனர்.

இன்று அதிகாலை 3 மணிக்கு நிறுவனத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களுக்கு தீ பரவி மளமளவென எரிந்தது. இதை பார்த்து இரவு காவல் பணியில் ஈடுபட்டு இருந்த பாலசுப்பிரமணி (58) அதிர்ச்சி அடைந்தார்.

அவர் உடனடியாக நிர்வாகத்தினருக்கு தகவல் தெரிவித்துவிட்டு சத்தம் போட்டு அக்கம்பக்கத்தினரை உதவிக்கு அழைத்தார். அருகில் உள்ள நிறுவனங்களில் இரவு பணியில் ஈடுபட்டு இருந்த தொழிலாளர்களும், குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்களும் திரண்டு வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

சூலூர் தீயணைப்பு நிலையத்தில் இருந்து வீரர்கள் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

கண்ணம்பாளையம் பேரூராட்சி தலைவி புஷ்பலதா ராஜகோபால் மற்றும் கோவை மாவட்ட உதவி தீயணைப்பு அலுவலர் அழகர்சாமி நேரில் பார்வையிட்டு தீயணைப்பு பணிகளை உஷார்படுத்தினர்.

பல மணி நேர போராட்டத்துக்கு பின் அங்கு பற்றி எரிந்த தீ முழுமையாக அணைக்கப்பட்டது. இருந்தாலும் 15க்கும் மேற்பட்ட கார்கள் எரிந்து முற்றிலும் நாசமானது.

ஊழியர்கள் விரைந்து செயல்பட்டு 50க்கும் மேற்பட்ட கார்களை அங்கிருந்து பத்திரமாக வெளியேற்றினர். இதனால் அந்த கார்கள் தப்பின.

தீ விபத்தின் போது கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்தது. மேலும் கார் பழுது நீக்கும் பகுதி, கார் விற்பனை பிரிவு, உதிரிபாகங்கள் வைக்கும்

அறை, கணினி அறை ஆகியவற்றும் தீ பரவி அங்கிருந்த பொருட்கள் சேதம் அடைந்தன.

தீ விபத்தால் அந்த சாலையில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு மாற்றுப் பாதை வழியாக வாகனங்களை செல்ல ஏற்பாடு செய்தனர்.

தீ விபத்து எதனால் ஏற்பட்டது என தெரியவில்லை. இதுதொடர்பாக சூலூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தீ விபத்து நடந்தது இரவு நேரம் என்பதால் ஊழியர்கள் யாரும் நிறுவனத்தில் இல்லை. இதனால் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த நிறுவனத்தை ஒட்டி மற்றொரு கார் பழுது பார்க்கும் ஒர்க்ஷாப்பும் உள்ளது. அங்கு தீ பரவுவதற்கு முன்பு தீயணைப்புவீரர்கள்துரிதமாக செயல்பட்டு தீயை அணைத்து விட்டனர்.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் பச்சை நிற கல் மணிகள் கண்டெடுப்பு



தாயில்பட்டி, செப். 6
விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு நடைபெற்று வருகிறது. இது வரை 10 குழிகள் தோண்டப்பட்டு உள்ளன. ஆபரணங்கள், செப்புக்காசுகள், சுடுமண் காதணிகள், சூது பவளம், உள்பட 1560 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. 9வது அகழாய்வு குழியை மேலும் தோண்டியபோது பச்சை நிறத்திலான 2 கல்மணிகள் கிடைத்துள்ளன. இவை பெண்கள் அணியக்கூடிய ஆபரணங்களாகவும், ஆண்கள் அணியும் மோதிரத்தில் பதிப்பதற்காகவும் பயன்படுத்தி இருக்கலாம் என கூறப்படுகிறது. ஏற்கனவே சிவப்பு, மஞ்சள், ஊதா, இளஞ்சிவப்பு, ஆரஞ்சு உள்ளிட்ட நிறங்களிலும் கல்மணிகள் கிடைத்துள்ளன. எனவே முற்காலத்தில் இப்பகுதியில் கல்மணிகள், பாசிமணிகள், கண்ணாடி மணிகள் உள்ளிட்டவை தயாரிப்பு கூடம் இருந்திருக்க வாய்ப்பு இருப்பதாக அகழாய்வு இயக்குனர் பொன்பாஸ்கர் தெரிவித்தார். முதல் இரண்டு கட்ட அகழாய்வைவிட தற்போது கூடுதலாக தொல் பொருட்கள் கிடைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

# விநாயகர் சதுர்த்தி: சென்னை கோவை இடையே சிறப்பு ரெயில் இயக்கம்

சென்னை, செப். 6
விநாயகர் சதுர்த்தி பண்டிகை முன்னிட்டு கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் பயணிகளின் வசதிக்காக சென்னை சென்டிரல் கோவை இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படும் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.


இதுகுறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை சென்டிரல் கோவை சிறப்பு ரெயில் (06151) நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் இருந்து பிற்பகல் 3.45 மணிக்கு புறப்பட்டு திருவள்ளுவர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை வழியாக இரவு 8.28 மணிக்கு சேலம் வந்தடையும். இங்கிருந்து 8.30 மணிக்கு புறப்பட்டு ஈரோடு, திருப்பூர் வழியாக 11.45 மணிக்கு கோவை சென்றடையும்.

இதேபோல் மறுமார்க்கத்தில் கோவை சென்னை சென்டிரல் சிறப்பு ரெயில் (06152) வருகிற 8ந் தேதி கோவையில் இருந்து 11.30 மணிக்கு புறப்பட்டு ஈரோடு, திருப்பூர் வழியாக இரவு 1.47 மணிக்கு சேலம் வந்தடையும். இங்கிருந்து 1.50 மணிக்கு புறப்பட்டு ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம்,

திருவள்ளுவர் வழியாக மறுநாள் காலை 7.35 மணிக்கு சென்னை சென்டிரல் சென்றடையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆறுகாட்டுத்துறை கடற்கரை பகுதியில் "சாகர் கவாச்" பாதுகாப்பு ஒத்திகை



வேதாரண்யம், செப். 6
கடலோர பாதுகாப்பு குழும போலீசாரால் பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுக்கவும், கடத்தலை தடுக்கவும் 'சாகர் கவாச் ஆபரேஷன்' என்ற கடலோரபாதுகாப்பு ஒத்திகை ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். அதன்படி, கடலோர பகுதிகளில் 'சாகர் கவாச்' ஒத்திகை இன்றும், நாளையும் நடக்கிறது.

அந்த வகையில், நாகை மாவட்டம், ஆறுகாட்டுத்துறை கடற்கரை பகுதியில் வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழும இன்ஸ்பெக்டர் ஜோதி முத்துராமலிங்கம் தலைமையில் கடலோர பாதுகாப்பு போலீசார் படகு மூலம் கடலுக்கு சென்று ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பின்னர், கடலோர மீனவ கிராமங்களான வெள்ளப்பள்ளம், புஷ்பவனம், நாலுவேதபதி, கோடியக்கரை, மணியன் தீவு உள்ளிட்ட கிராமங்களில் போலீசார் 4 குழுக்களாக பிரிந்து சோதனை மேற்கொண்டனர். அங்கு வழியில் தென்படும் மீனவர்களிடம் சந்தேகத்துக்கு இடமான நபர்கள் யாரேனும் தெரிந்தால் உடனடியாக காவல்துறைக்கு தகவல் தர வேண்டும் என முன்னெச்சரிக்கைவிடுத்து வருகின்றனர்.

காலை தொடங்கிய பாதுகாப்பு ஒத்திகையானது மறுநாள் மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது.

# ஊரை ஒதுக்கி மேம்பாலம் கட்டும் திட்டத்தை கை விட வேண்டும்: விஜய் வசந்த் கோரிக்கை



கன்னியாகுமரி, செப். 6

கன்னியாகுமரிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த்அம்மாவட்ட மக்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை செய்து வருகிறார்.

அந்த வகையில் அவர் தமிழ்நாடு பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ் சாலை துறை அமைச் சர் எ.வ. வேலுவை நேரில் சந்தித்து கன்னி யாகுமரி மாவட்டம் விரிகோடு பகுதியில் அமைய இருக்கும் ரெயில்வே மேம்பா லத்தை அந்த பகுதி மக் களின் கருத்தைக் கேட்டு அவர்கள் வாழ்வா தாரம் பாதிக்காத வகை யில், மக்கள் கோரிக் கைக்கு ஏற்ப கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

மேலும் ஊரை ஒதுக்கி மேம்பாலம் கட்டும் திட் டத்தை கை விட வேண் டும் எனவும் கேட்டு கொண்டேன்.

# குரூப்4 தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் வெளியீடு

சென்னை, செப். 6

தமிழ்நாடு அரசு பணியா ளர் தேர்வாணையம் (டி. என்.பி.எஸ்.சி.), தமிழக அரசு துறைகளில் காலி யாக உள்ள பணியிடங் களை குரூப்1, குரூப்2 மற் றும் குரூப்4 ஆகிய போட்டித் தேர்வுகள் வாயி லாக நிரப்பி வருகிறது.

அந்த வகையில், கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ), இளநிலை உத வியாளர், தட்டச்சர், சுருக் கெழுத்து தட்டச்சர், இள நிலை செயல் பணியாளர், ஆய்வக உதவியாளர், வரித்தண்டலர், வனக்காப் பாளர், நேர்முக உதவியா ளர் உள்பட பல்வேறு பத விகள் அடங்கிய குரூப்4 பணிகளுக்கான போட்டித் தேர்வு கடந்த ஜூன் மாதம் 9ந்தேதி நடைபெற்றது. இந்த தேர்வை, தமிழகம் முழுவதும் 15 லட்சத்து 88 ஆயிரத்து 684 தேர்வர்கள் எழுதினர்.

இதற்கான தேர்வு முடிவு கள் எப்போது வெளியா கும் என்று தேர்வர்கள் ஆவலுடன் காத்திருந் தனர்.

இந்த நிலையில், குரூப்4 தேர்வுக்கான முடிவுகள் அடுத்த மாதம் (அக்டோ பர்) வெளியாகும் என்று டி.என்.பி.எஸ்.சி. அறி வித்துள்ளது. இதற்கான அறிவிப்பை 'எக்ஸ்' சமூக வலைதளத்தில் டி.என். பி.எஸ்.சி, வெளியிட் டுள்ளது.

# அக்டோபர் 1ந்தேதி முதல் தூத்துக்குடி மாலத்தீவு இடையே கப்பல் போக்குவரத்து



சென்னை, செப். 6

தமிழ்நாட்டில் சென்னை, எண்ணூர் காம ராஜர் மற்றும் தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறை முகங்கள் பெரிய அளவில் செயல்பட்டு வருகின்றன. இந்த துறைமுகங்களில் இருந்து சரக்கு கப்பல் சேவை நடந்து வருகிறது. சென்னையில் இருந்து அந் தமானுக்கு பயணிகள் கப் பல் சேவையும் நடந்து வருகிறது.

இதுதவிர கடந்த மாதம் 16ந் தேதியில் இருந்து சுற் றுலா மற்றும் வணிகத்தை மேம்படுத்தும் வகையில் நாகப்பட்டினம் இலங்கை காங்கேசன் துறைக்கு பய ணிகள் கப்பல் போக்குவ ரத்து தொடங்கி நடந்து வருகிறது. இதனைத்தொ டர்ந்து தற்போது தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறை முகத்தில் இருந்து மாலத்தீ வுக்கு சரக்கு கப்பல் போக் குவரத்து தொடங்க இருக்கிறது.

இரு நாடுகளுக்கு இடை யேயான இணைப்பு மற் றும் இருதரப்பு வர்த்த கத்தை மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதி யாக, தமிழ்நாடு மற்றும் மாலத்தீவுகளுக்கு இடை யேயான நேரடி கப்பல் சேவை தொடங்கப்பட உள்ளது. இந்த சேவையா னது இந்திய பெருங்கடல் பகுதியில் இரு நாடுகளும் மேற்கொண்ட இணைப்பு முயற்சிகளுக்கு ஒரு புதிய அத்தியாயத்தைச் சேர்க் கும் என்கின்றனர்.

இதுகுறித்து கப்பல் போக்குவரத்தை தொடங்க இருக்கும் எச்வி. கார்கோ லாஜிஸ் டிக்ஸ் (HV Cargo Logistics) நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆனந்த் கூறும்போது, 'இந்தியா மாலத்தீவு இடையே வர்த் தக உறவை வலுப்படுத் தும் நோக்கத்தில் தூத்துக்குடி மாலத்தீவு இடையே அக்டோபர் 1ந்தேதி முதல் சரக்கு கப் பல் போக்குவரத்து தொடங்கப்படுகிறது.

இதன்மூலம் வாராந்திர அடிப்படையில் செலவு குறைந்த மற்றும் விரை வான சேவை வழங்கப் படுகிறது. அட்டு, ஹிதிதாநூ மற்றும்மாலத்தீவு போன்ற முக்கிய இடங்களுக்கு நேரடி கப்பல் போக்குவ ரத்து இதில் அடங்கும். இந்த புதிய சேவை செலவு குறைந்த போக்குவரத்தாக இருக்கும் வகையில் வடி வமைக்கப்பட்டு உள்ளது. இது வாடிக்கையாளர்க ளுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

அக்டோபர் 1ந்தேதியில் இருந்து அடுத்த ஆண்டு (2025) ஏப்ரல் 30ந்தேதி வரை முதல் கட்டமாக 7 மாதங்கள் இந்த சேவை நடக்க இருக் கிறது. தூத்துக் குடியில் இருந்து மாலத்தீவு 500 கடல் நாட்டிக்கல் மைல் தூரத்தில் இருப் பதால் இந்த தூரத்தை கடக்க 2½ நாட்கள் வரை ஆகும்.

குறிப்பாக மாலத்தீவின் உள்கட்டமைப்பை மேம் படுத்துவதற்கு தேவை யான கட்டுமானப் பொருட்கள் கொண்டு செல்வதற்கும் இந்த சேவை உதவிகரமாக இருக்கும். கட்டுமானத் திற்கு தேவைப்படும் பொக்லைன் எந்திரங்கள், கிரேன்கள், தொட்டிகள், லாரிகள், திடப் பொருட் கள், எந்திரங்கள், ஜென ரேட்டர்கள் உள்ளிட்ட பெரிய மற்றும் கனரக பொருட்கள், இவற்றுடன் உணவு பொருட்களான காய்கறி, முட்டை, மளிகை பொருட்களை யும் குறைந்த செலவில் கொண்டு செல்ல முடியும்.

இந்த முயற்சியானது தளவாட மற்றும் பிற செல வுகளை குறைக்கும், இணைப்பை மேம்படுத் தும் மற்றும் இந்தியாமா லத்தீவுகளுக்கு இடையே சரக்குகளை எடுத்துச் செல் வதற்கான நேரத்தை குறைக்கும்.

நேரடி கப்பல் சேவை மூலம் அண்டை நாடுகளு டன் வர்த்தகம் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் மற்றும் கடல்சார் வர்த்தக தொடர்புகள் மேம்படுத் தப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. நாங்கள் அருகில் உள்ள 1,500 தீவுகளுக்கும் நேரடியாக சென்று சரக்கு களை கையாளும் வச தியை அறிமுகப்படுத்த உள்ளோம்.

தூத்துக்குடி மற்றும் மாலத்தீவு இடையே ஒரு சேவை முன்பு இந்திய கப் பல் கழகத்தால் இயக்கப் பட்டது. இந்தியா மற்றும் மாலத்தீவுகளுக்கு இடை யேயான வர்த்தக உறவு களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள் ளது, இது வணிகங்கள் எல்லை தாண்டிய பரிவர்த் தனைகளில் ஈடுபடுவதை எளிதாக்குகிறது' என்றார்.

# எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 4 பேர் இலங்கை கடற்படையால் கைது



புதுக்கோட்டை, செப். 6

தமிழகத்தில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படை யினர் சிறை பிடிப்பதும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கதை யாகி உள்ளது.

இந்த நிலையில் புதுக் கோட்டை மாவட்ட துறை முகத்தில் இருந்து 2 படகு களில் 9 மீனவர்கள் மீன்பி டிக்க கடலுக்குச் சென்ற னர்.

நெடுந்தீவு கடல்பகுதி யில்அவர்கள்மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, எல்லை தாண்டி மீன்பிடித்ததாக அவர் களை இலங்கை கடற்ப டையினர் கைது செய்த னர்.

படகில் இருந்த ஒரு மீன வருக்கு உடல்நலம் குன் றிய நிலையில், ஒரு பட கில் இருந்த 5 மீனவர்களை இலங்கை கடற்படையி னர் விடுவித்தனர்.

கைது செய்யப்பட்ட 4 மீனவர்கள் விசாரணைக்குப் பிறகு மயிலட்டி துறைமுகத்தில் இலங்கை அதிகாரிகளி டம் ஒப்படைக்கப்படுவர் என கூறப்படுகிறது.

# பணியில் உள்ள போலீசார் கட்டாயம் லத்தி வைத்திருக்க வேண்டும்

## எஸ்.பி. அதிரடி உத்தரவு



விருதுநகர், செப். 7

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் நேற்று பெண் டி.எஸ்.பி. காயத்ரியை போராட்டக் காரர்கள் தாக்கிய சம்பவத் தைத் தொடர்ந்து, 7 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், விருதுநகர் மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் கண்ணன் போலீசாருக்கு சில உத்தர வுகளைபிறப்பித்துள்ளார்.

இது தொடர்பான உத்தர வில், இன்று முதல் இந்த நொடியில் இருந்து பாது காப்பு பணியில் ஈடுபடும் அனைத்து போலீசாரும் கையில் லத்தி இல்லாமல் இருக்கக்கூடாது. பாது காப்புப் பணிக்கு வரும் போது கையில் லத்தி இல் லாமல் யாரையாவது பணியில் பார்த்தால் உடனே சஸ்பெண்ட் செய் யப்படுவர். பிரச்சனை நடைபெறும் இடத்தில் வெறும் கையோடு பேசுவ தற்கும், கையில் லத்தி யோடு பேசுவதற்கும் வித் தியாசம் இருக்கிறது. குறிப்பாகஅடிதடிபோன்ற இடங்களில் வாயில் பேசிக் கொண்டிருந்தால் சரியாகவே இருக்காது கையில் லத்தி கண்டிப் பாக வைத்திருக்க வேண் டும்.

குறிப்பாக பீட் போலீஸ், பந்தோபஸ்த் போலீஸ், பணியில்இருக்கும்எல்லா போலீசும் நான் பார்க் கும்போது கையில் லத்தி இல்லாமல் யாரும் இருக் கக்கூடாது. இதுவே முத லும் கடைசியும் ஆக இருக்க வேண்டும். ஆகை யால் அனைத்து டி.எஸ். பி.யும் ரோல் காலில் கட் டாயம் லத்திக் கொண்டு வருவதற்குப் போலீசை அறிவுறுத்த வேண்டும். சீருடையில் இருசக்கர வாகனத்தில் செல்கின்ற போலீஸ் கட்டாயம் தலைக்கவசம் அணிந்து தான் செல்ல வேண்டும். நானே சாலையில் போகும்போது தலைக்கவ சம் இல்லாமல் யாரையா வது சாலையில் பார்த்தால் அவர்களுக்கு உடனே வித் தவுட்தலைக்கவசம்பைன் விதிக்கப்படும். டி.எஸ். பி. தலைமையிலான போலீசார் எப்பொழுதும் அலர்ட் ஆகவும் தயாராக வும் இருக்க வேண்டும். டி.எஸ்.பி. அனைவரும் இரவு ரோந்து பணியில் ஈடுபடும் பொழுது கட்டா யம் காரில் ஒரு போலீஸ் வைத்திருக்க வேண்டும்" என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கண் ணன் தெரிவித்துள்ளார்.

# நித்தியானந்தாவை காணொலியில் ஆஜராக சொன்ன நீதிபதி: மறுத்ததால் மனு தள்ளுபடி



சென்னை, செப். 6

நாகப்பட்டினம், திருவா ரூர் மாவட்டங்களில் உள்ள வேதாரண்யம் ஸ்ரீ போ.கா.சாதுக்கள் மடம், ஸ்ரீ அருணாசல ஞானதே சிக சுவாமிகள் மடம், ஸ்ரீ பால்சாமி, சங்கரசாமி மடம், ஸ்ரீ சோமநாத சுவாமி கோவில் மடம் ஆகிய நான்கு மடங்களின் மடாதிபதியாக நித்யானந்தாவை நிய மித்து, மடாதிபதி ஆத்மா னந்தா அறிவித்தார். இது தொடர்பாக நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் உரிமையி யல் வழக்குகள் நிலுவை யில் உள்ளன. இந்த சூழ லில் பக்தர் ஒருவர் அளித்த புகாரின் அடிப்படையில், நான்கு மடங்களையும் நிர் வகிக்க, தக்கார் நியமித்து தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை உத்த ரவு பிறப்பித்தது.

இந்த நிலையில், நாகை, திருவாரூர் மாவட்டங்க ளில் உள்ள மடங்களுக்கு தக்கார் நியமன நடவடிக் கைகளுக்கு தடை விதிக் கக் கோரி பெண் சீடருக்கு பொது அதிகாரம் வழங்கி நித்யானந்தா சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். 2017ல் தொடர்ந்த இந்த வழக்கு இன்று சென்னைஐகோர்ட் டில் நீதிபதி தண்டபாணி முன் விசாரணை க்கு வந் தது. அப்போ து நீதிபதி, மடங்களை நிர்வகிக்க தக் காரை நியமித்து அரசு பிறப்பித்த உத்தரவில் தலையிட முடியாது. வழ க்கை தொடர உமாதேவி என்ற சீடருக்கு பவர் ஆப் அட்டார்னியை நித்யா னந்தா கொடுத்துள்ளார். உண்மையிலேயே பொது அதிகார பத்திரத்தை நித் யானந்தா கொடுத்தாரா என நீதிமன்றம் அறிய விரும்புகிறது. ஆகவே, நித்யானந்தா நேரில் ஆஜ ராகி பொது அதிகார பத்தி ரத்தை கொடுத்தது உண் மைதான் என தெரிவிக்க வேண்டும். உமாதேவிக்கு வழங்கப்பட்டுள்ள பொது அதிகார பத்திரத்தின் மீது சந்தேகம் உள்ளதால், நித் யானந்தாவிடம் விசா ரணை நடத்த வேண்டும். அவரை ஆஜராக சொல் லும்படி, மனுதாரர் தரப்பு வழக்கறிஞரிடம் கூறி னார். இதற்கு பதில் அளித்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், நித்தியானந்தா இந்தியா வில் இல்லை, மேலும் அவர் பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியும் அல்ல என் றார். உடனே நீதிபதி, நித் யானந்தா எங்கு இருக்கி றார்எனதெரியவேண்டும். காணொளிக் காட்சி மூலம் அவரை ஆஜராக சொல்ல லாம் என்று தெரிவித்தார். அதற்கு மனுதாரர் தரப் பில், அவர் ஆஜராக இய லாது என்று தெரிவிக் கப்பட்டது.

இதையடுத்து, மடங் களை நிர்வகிக்க தக்கார் நியமித்து அரசு பிறப்பித்த உத்தரவில் தலையிட முடி யாது எனக் கூறி நீதிபதி தண்டபாணி மனுவை தள் ளுபடி செய்தார் . மேலும், நித்யானந்தாவின் ஆன்மீக உரைகள் சிறப்பானவை என்றும், அவரது கதவைத் திற காற்று வரட்டும் என்ற தொடரில் ஆழ்ந்த அர்த் தங்கள் உள்ளது என்றும், காஞ்சி பெரியவர் கூறியது போல, சன்னியாசி, சன்னி யாசியாக இருக்க வேண் டும்என்றும்நீதிபதிகருத்து தெரிவித்தார்.

# விஜய் மாநாட்டிற்கு அனுமதி கொடுப்பதில் ஏன் தாமதம்? தமிழிசை கேள்வி



சென்னை, செப். 6

பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் தமிழக கவர் னர் ஆர்.என்.ரவியை இன்று சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந் தித்த தமிழிசை சவுந்தரரா ஜன் கூறியதாவது:

கார் ரேசுக்கு உடனடி யாக அனுமதி அளிக்கப்ப டுகிறது. ஆனால், விஜய் மாநாட்டிற்கு அனுமதி கொடுப்பதில் தாமதம் ஏன்? மாநாடு நடத்தவிடா மல் விஜய் கட்சியை தி.மு.க. அரசு முடக்கு கி றது. மாநாடு நடத்த இடம் கொடுப்பதில் தி.மு.க. அர சுக்கு என்ன பிரச்சினை? இதற்காக நான் விஜய்க்கு ஆதரவாக பேசுகிறேன் என்று கிடையாது. நடிகர் விஜய் பாவம். ஒவ்வொரு முறையும் மாநாட்டுக் கான இடத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்.

விஜய்மீதுதி.மு.க.வுக்கு ஏன் அவ்வளவு பயம்? மாநாடு நடத்த இடத்தை கொடுத்தால், மடத்தை பிடித்து விடு வார் என்று தி.மு.க. பயப்படுகிறது. விஜய்க்கு ஆதரவாக நாங்கள் செயல்பட வில்லை. ஒரு புதிய கட்சி வரும்போது அதை ஆத ரிப்போம். நாங்கள் அனை வரும் களத்தில் இருக்கி றோம். யாருக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என் பதை மக்கள் முடிவு செய் வார்கள். எதிர்க்கட்சிகளை தி.மு.க.அரசு முடக்க நினைக்கிறது. 2026 தேர் தலை பார்த்து தி.மு.க.வுக்கு பயம் வந்து விட்ட தால் எதிர்க்கட்சி களை முடக்கும் நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# வேகமாக பரவும் டெங்கு காய்ச்சலைத் தடுக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஓ.பன்னீர்செல்வம்



சென்னை, செப். 6

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன் னீர்செல்வம் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரி வித்திருப்பதாவது:

நோய்த் தொற்றால் பாதிக்கப்படும் விலங்குக ளிடமிருந்து மனிதர்க ளுக்குபரவக்கூடியகுரங்கு அம்மை பல நாடுகளில் பரவி உள்ள நிலையில், இதற்கான வழிகாட்டு முறைகளை மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை அதிகரித்து வருவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.

மத்திய மக்கள் நல் வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை தெரிவித்துள்ள புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. 2020ம் ஆண்டு 2,410 ஆக இருந்த பாதிக் கப்பட்டோரின் எண் ணிக்கை, 2021ம் ஆண்டு 6,039 ஆகவும், 2022ம் ஆண்டு 6,430 ஆகவும், 2023ம் ஆண்டு 9,121 ஆக வும் அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் இதுவரை 11,742 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தமிழ்நாட் டில் ஒரே நாளில் 205 பேர் டெங்குவால் பாதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பத்திரிகையில் செய்தி வந்துள்ளது.

தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவமழை இயல் பைவிடஅதிகமாகபெய்து வருகின்ற நிலையில், அடுத்த மாதம் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், டெங்கு காய்ச் சல் அதிகமாக பரவுவதற் கான வாய்ப்பு கள் உள்ளன. டெங்கு காய்ச் சல் பரவுவ தற்கு காரண மான ஏடிஸ் கொசுக்கள் தூய்மையான நீர்த் தேக்கங்க ளில் உற்பத்தி யாவதால், 'வருமுன் காப்போம்' என் பதற்கேற்ப ஆங்காங்கே சாலையோரங்களில் தேங் கியிருக்கும் வெள்ள நீரை உடனுக்குடன் அப்புறப்ப டுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், வீடுக ளைச் சுற்றி தண்ணீர் தேங் காமல் பார்த்துக் கொள்ளு மாறு பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கப்பட வேண்டும். இது தொடர் பாக ஆலோசனைக் கூட் டம் நடைபெற்று, அதற் கான கையேடு வழங்கப்பட்டாலும், பெரும்பாலான இடங்க ளில் சாலையோரங்களில் தேங்கியுள்ள நீர் அகற்றப் பட்டதாகத் தெரிய வில்லை. சொல்லில் இருக்கின்ற வேகம் செய லில் இருப்பதாகத் தெரிய வில்லை.

டெங்கு காய்ச்சல் பரவு வதைத் தடுக்கும் வகை யில், இது குறித்த விழிப்பு ணர்வை பொதுமக்களிடையே ஏற் படுத்தவும், பொது இடங் களில் சுகாதாரப் பணி களை சிறப்பாக மேற்கொள்ளவும், சாலை களில் தேங்கும் தண்ணீரை அவ்வப்போது அகற்ற வும், அரசு மற்றும் தனி யார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்குத் தேவை யான படுக்கைகளை ஏற்ப டுத்தவும், இதற்குத் தேவையான மருந்துகளை இருப்பில் வைத்துக் கொள்ளவும் தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுஅண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித் துள்ளார்.

# அரசுப் பள்ளிகளில் விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாட சுற்றறிக்கை விட்டதாக வதந்தி



சென்னை, செப். 6

விநாயகர் சதுர்த்தி விழா வரும் 7ம் தேதி கொண்டா டப்படுகிறது. இதனை அரசு பள்ளிகளிலும் கொண்டாட வேண்டும் என்று கூறி பெரம்பலூர், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவ லர்கள் அந்தந்த மாவட்ட அரசு பள்ளிகளுக்கு சுற்ற றிக்கை அனுப்பியதாக தக வல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் இதுதொ டர்பாக தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பு குழு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக அதன் எக்ஸ் வலைதளத்தில் கூறி யிருப்பதாவது:

'விநாயகர் சதுர்த்தி விழா வரும் செப்.,7ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதனை அரசு பள்ளிகளி லும் கொண்டாட வேண் டும் எனக்கூறி பெரம்ப லூர், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் அந்தந்த மாவட்ட அரசு பள்ளிக ளுக்கு சுற்றறிக்கை அனுப் பியுள்ளனர்' என்ற செய் திப் பரப்பப்படுகிறது.

இது பொய்யான செய்தி. தமிழ்நாடு மாசுக்கட்டுப் பாட்டு வாரியத்தின் அறிவு றுத்தலின் அடிப்படையில், 'விநாயகர் சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூ ழலுக்குப் பாதுகாப்பான முறையில் கொண்டாடும் பொருட்டு மாணவர்களி டையே விழிப்புணர்வு ஏற் படுத்தும் வகையில் 10 உறுதிமொழிகளை எடுக்க வேண்டும்' என்றே பெரம் பலூர், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் சுற்றறிக்கை அனுப்பியிருக்கின்றனர். இதைத் திரித்து அரசுப் பள் ளிகளில் விநாயகர்சதுர்த்தி யைக் கொண்டாட வேண் டும் என்று சுற்றறிக்கை அனுப்பியதாகப் பரப்பி வருகின்றனர்.

இவ்வாறு அதில் தெரி விக்கப்பட்டுள்ளது.

தினகனி



# வந்தாச்சி புது பிக்பாஸ் 8வது சீசனை தொகுத்து வழங்கும் நடிகர் விஜய் சேதுபதி




உலகளவில் பிரபலமான பிக்பாஸ் நிகழ்ச்சி, இந்திய மொழிகளிலும் நடைபெற்று வருகிறது. தமிழில் பிரபல தொலைக்காட்சியில் 2016 ம் ஆண்டு முதல் ஒளிபரப்பாகி வந்த பிக்பாஸ் நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வந்தார். வெறும் பொழுதுபோக்கு அம்சத்திற்காக இல்லாமல் பல சினிமா அனுபவங்களையும் புத்தகங்களையும் தொடர்ந்து அறிமுகப்படுத்தினார்.

தொகுப்பாளராக கடந்த 7 ஆண்டுகளாக பொறுப்பு வகித்த பிக்பாஸ் நிகழ்ச்சியிலிருந்து விலகுவதாக சமீபத்தில் கமல்ஹாசன் அறிவித்தார். இதனையடுத்து, கமல்ஹாசனுக்கு பதில் யார் பிக் பாஸ்' நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவார் என ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில், பிக் பாஸ் 8வது சீசனை நடிகர் விஜய் சேதுபதி தொகுத்து வழங்க உள்ளார். பிக் பாஸ் 8வது சீசனின் டீசரரை வெளியிட்டு இதனை அறிவித்துள்ளனர்.

முதல் முறையாக விஜய் சேதுபதி பிக் பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க உள்ளதால் பிக் பாஸ் 8வது சீசன் மீதான எதிர்பார்பபு ரசிகர்களிடையே அதிகமாக உள்ளது.

# 'தி கோட்' படத்தின் கடைசி அப்டேட் ரிலீஸ் புரோமோ வெளியிட்ட படக்குழு



இயக்குனர் வெங்கட்பிரபு இயக்கத்தில் நடிகர் விஜய் , 'தி கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்' (தி கோட்) படத்தில் நடித்துள்ளார். விஜய்யுடன், பிரசாந்த், பிரபுதேவா, யோகிபாபு, சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி உள்பட பலர் நடித்துள்ளனர்.

ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். டிஏஜிங் தொழில்நுட்பம் மூலம் விஜய் இளம் வயதில் தோன்றும் காட்சிகள் இருப்பதால் இப்படத்தின் மீது பெரியளவில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ரசிகர்கள் ஆர்வத்துடன் டிக்கெட் முன்பதிவு செய்துவருகின்றனர். நடிகர் விஜய் கட்சி தொடங்கிய பின்னர் அவரது நடிப்பில் வெளியாகும் முதல் திரைப்படம் இதுவாகும். தி கோட் நாளை திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில் படத்தின் கடைசி அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, தி கோட் படத்தின் ரிலீஸ் புரோமோ வெளியாகியுள்ளது. இப்படத்திற்கு நாளை ஒருநாள் மட்டும் சிறப்பு காட்சிக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# 'கோலி சோடா ரைசிங்' வெப் சீரிஸின் ஓ.டி.டி ரிலீஸ் அப்டேட்

விஜய் மில்டன் இயக்கத்தில் கிஷோர், ஸ்ரீராம், பாண்டி உள்ளிட்ட பலர் நடிப்பில் 2014ஆம் ஆண்டு வெளியான படம் கோலி சோடா. இயக்குனர் பாண்டிராஜ் வசனம் எழுதியிருந்த இப்படத்தை திருப்பதி பிரதர்ஸ் தயாரித்திருந்தனர். அருணகிரி இப்படத்திற்குப் பாடல்கள் அமைத்திருக்க அனூப் என்பவர் பின்னணி இசையை கவனித்திருந்தார். இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதையடுத்து படத்தின் இரண்டாம் பாகம் உருவானது. இதில் முதல் பாகத்தில் இடம்பெற்ற நடிகர்கள் இல்லாமல் புது நடிகர்கள் நடித்திருந்தனர். விஜய் மில்டனே இந்தப் படத்தையும் இயக்கியிருந்த நிலையில் கவுதம் மேனன், சமுத்திரக்கனி உள்ளிட்டோர் நடித்திருந்தனர். ரப்நோட் நிறுவனம் தயாரிப்பில் அச்சு ராஜாமணி இசையில் வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களே பெற்றது. இந்த நிலையில் தற்போது இப்படத்தின் அடுத்த பாகம் வெப் சீரிஸாக தயாராகி உள்ளது. இந்த வெப் சீரிஸுக்கு 'கோலி சோடா ரைசிங்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் சேரன், ஷியாம், ரம்யா நம்பீசன், அபிராமி, அம்மு அபிராமி,குக் வித் கோமாளி புகழ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். மேலும் தமிழ், தெலுங்கு, இந்தி உள்பட ஏழு மொழிகளில் டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்து. தற்போது, இந்த வெப் சீரிஸின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி, 'கோலி சோடா ரைசிங்' வெப் சீரிஸ் வருகிற 13ந் தேதியில் இருந்து டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது.




# 'டாக்சிக்' படப்பிடிப்பை தொடங்கினாரா நயன்தாரா? வைரலாகும் புகைப்படம்





'ஐயா' திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான நயன்தாரா தொடர்ந்து 20 வருடங்களுக்கும் மேலாக திரைத்துறையில் இருக்கிறார். தமிழ் திரையுலகில் பெண் சூப்பர் ஸ்டாராக கொடி கட்டி பறக்கும் நயன்தாரா 'ஜவான்' படத்தில் ஷாருக்கானுடன் நடித்து இந்தியில் அறிமுகமானார்.

இந்த படம் ரூ.1,000 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை நிகழ்த்தியதோடு நயன்தாராவை இந்தி ரசிகர்கள் மத்தியிலும் பிரபலமாக்கியது. தற்போது, யாஷ் நடிக்கும் 'டாக்சிக்' படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில், நயன்தாரா தனது இன்ஸ்டாகிராமில் பகிர்ந்த புகைப்படம், ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த புகைப்படத்தை பார்த்த ரசிகர்கள் இது 'டாக்சிக்' படப்பிடிப்பு குறித்த அப்டேட் என்று கருத்து பதிவிட்டு வருகின்றனர். ஆனால், அது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் தயாரிப்பு நிறுவனம் சார்பில் வெளியாகவில்லை. இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது, நயன்தாரா நடிப்பில் இரண்டு படங்கள் வெளியாக உள்ளன. மாதவன், சித்தார்த், மீரா ஜாஸ்மின் நடித்துள்ள 'டெஸ்ட்' படமும், 'மன்னாங்கட்டி சின்ஸ் 1960' படமும் விரைவில் திரைக்கு வர உள்ளன. மலையாளத்தில் நிவின் பாலியுடன் 'டியர் ஸ்டூடண்ட்ஸ்' படத்தில் நயன்தாரா நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூலி படம்: 1421 எண்ணிற்கு அர்த்தம் என்ன தெரியுமா?




சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் நடிகர் ரஜினிகாந்த்தின் 171வது படமாக 'கூலி' உருவாகிறது. இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் படத்தின் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் முக்கிய கதாபாத்திரத்தில் சுருதி ஹாசன், சத்யராஜ், உபேந்திரா உள்ளிட்டோர் நடிக்கின்றனர்.

இதற்கிடையே, இப்படத்தில் இடம் பெற்றுள்ள கதாபாத்திரங்களை போஸ்டர் மூலம் அறிமுகம் செய்தார் லோகேஷ் கனகராஜ். அதன்படி , கூலி படத்தில் தெலுங்கு நடிகர் நாகார்ஜுனா, நடிகை சுருதி ஹாசன், மலையாள நடிகர் சவுபின் சாஹிர், நடிகர் சத்யராஜ் மற்றும் நடிகர் உபேந்திரா, ரஜினிகாந்த் ஆகியோரின் போஸ்டர்களை படக்குழு பகிர்ந்து கதாபாத்திரங்களின் பெயர்களை வெளியிட்டது.

இதில் 'தேவா' என்ற கதாபாத்திரத்தில் ரஜினி நடித்துள்ளார். அந்த போஸ்டரில் ரஜினியின் கையில் வைத்திருக்கும் பேட்ஜ் ஒன்றில் '1421' என்ற எண் இடம் பெற்றுள்ளது. அந்த எண் குறித்து எல்லாருக்கும் கேள்விகள் எழுந்துள்ளன.

அதாவது, இந்த படம் முழுவதுமாக தங்க கடத்தலை மையமாகக் கொண்டு உருவாகி இருக்கிறது. அதில் 14 மற்றும் 21 என்பது தங்கத்தின் கேரட் மதிப்புகளை குறிப்பிடுவதாக தெரிகிறது. அதிலும், 14 கேரட் என்பது இந்தியா, கனடா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும், 21 கேரட் என்பது சவுதி உள்ளிட்ட அமீரக நாடுகளில் பயன்படுத்தப்படும் தங்கத்தின் மதிப்பை குறிப்பிடும் எண்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துபாய், கத்தார் போன்ற அமீரக நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு அதிகளவில் தங்க கட்டிகள் கடத்திவரப்படுவதால், இந்த எண் இடம் பெற்றிருக்க வாய்ப்புள்ளது. இந்த படத்தில் தங்க கட்டிகள், தங்கத்தால் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தங்க கடிகாரங்கள் அதிகம் இடம் பெற்றுள்ளதால், போஸ்டரில் இந்த எண் இடம் பிடித்திருக்கிறது என்று உறுதியாக சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவு ஊகிக்க முடிகிறது.

# பாரா ஒலிம்பிக்; வெண்கலப் பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு அன்புமணி ராமதாஸ் வாழ்த்து



பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

பாரீஸ் நகரில் நடைபெற்று வரும் பாரா ஒலிம்பிக் போட்டிகளின் ஆடவர் உயரம் தாண்டுதல் டி63 ஆட்டத்தில் 1.85 மீ. உயரம் தாண்டி வெண்கலப் பதக்கம் வென்ற தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலுவுக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் கடந்த 3 பாரா ஒலிம்பிக் போட்டிகளில் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் பதக்கங்களை வென்ற சாதனையை மாரியப்பன் படைத்திருக்கிறார். உலக அளவிலான போட்டிகளில் மேலும், மேலும் சாதனைகளை படைக்க மாரியப்பனுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போட்டியில் 1.88 மீ. உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீரர் சரத்குமாருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாரா ஒலிம்பிக்: இந்திய வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் இன்றைய போட்டிகள் விவரம்

மாற்றுத்திறனாளிகளுக்கான 17வது பாரா ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்து வருகிறது. இதில் ஏறக்குறைய 4,400 வீரர், வீராங்கனைகள் பங்கேற்று தங்களது திறமையை வெளிப்படுத்துகிறார்கள்.

இந்த போட்டி தொடர் செப்டம்பர் 8ம் தேதி உடன் முடிவடைய உள்ளது. இந்த தொடரில் இந்தியா இதுவரை 3 தங்கம், 7 வெள்ளி, 10 வெண்கலம் என 20 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 19வது இடத்தில் உள்ளது.

இந்நிலையில் பாரா ஒலிம்பிக் தொடரில் இன்று இந்திய வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்கும் போட்டிகளின் முழு விவரம் பின்வருமாறு:

பாரா சைக்கிள் ஓட்டுதல் (சாலை): ஆண்கள் தனிநபர் சாலை டைம் டிரையல் (பதக்க சுற்று) அர்ஷத் ஷேக் காலை 11.57 மணி பெண்களுக்கான சி13 தனிநபர் சாலை டைம் டிரையல் (பதக்க சுற்று) ஜோதி கதேரியா மதியம் 12.32 மணி

பாரா துப்பாக்கிச்சுடுதல்; பி4 கலப்பு 50மீ பிஸ்டல் எஸ்.எச்.1 (தகுதிச்சுற்று) நிஹால் சிங் மற்றும் ருத்ரன்ஷ் கண்டேல்வால் மதியம் 1.00 மணி

பாரா தடகளம்; ஆண்களுக்கான குண்டு எறிதல் எப். 46 (பதக்க சுற்று) முகமது யாசர், ரோகித் குமார் மற்றும் சச்சின் சர்ஜராவ் கிலாரி மதியம் 1.35 மணி

பாரா டேபிள் டென்னிஸ்; பெண்கள் ஒற்றையர் பிரிவு 4 (காலிறுதி) பவினா படேல் மதியம் 2.15

பாரா தடகளம்; பெண்களுக்கான குண்டு எறிதல் எப். 46 (பதக்க சுற்று) அமிஷா ராவத் மாலை 3.17 மணி

பாரா பவர் லிப்டிங்; ஆண்கள் 49 கிலோ (பதக்க சுற்று) பரம்ஜீத் குமார் மாலை 3.30 மணி

பாரா துப்பாக்கிச்சுடுதல்; பி4 கலப்பு 50மீ பிஸ்டல் எஸ்.எச்.1 (இறுதிப்போட்டி தகுதிபெற்றால்) நிஹால் சிங் மற்றும் ருத்ரன்ஷ் கண்டேல்வால் மதியம் 3.45 மணி

பாரா வில்வித்தை: ஆண்களுக்கான தனிநபர் ரிகர்வ் (1/16 வெளியேற்றுதல் சுற்று) ஹர்விந்தர் சிங் மாலை 5.49 மணி

ஆண்களுக்கான தனிநபர் ரிகர்வ் (1/8 வெளியேற்றிதல் சுற்று தகுதிபெற்றால்) ஹர்விந்தர் சிங் மாலை 6.40 மணி

பாரா பவர் லிப்டிங்; பெண்கள் 45 கிலோ (பதக்க சுற்று) சகினா காதுன் இரவு 8.30 மணி

பாரா வில்வித்தை: ஆண்களுக்கான தனிநபர் ரிகர்வ் (காலிறுதி சுற்று தகுதிபெற்றால்) ஹர்விந்தர் சிங் இரவு 9.17 மணி


ஆண்களுக்கான தனிநபர் ரிகர்வ் (அரையிறுதி சுற்று தகுதிபெற்றால்) ஹர்விந்தர் சிங் இரவு 10.08 மணி

பாரா தடகளம்; ஆண்கள் கிளப் எறிதல் எப். 51 (பதக்க சுற்று) தரம்பிர், பிரணவ் சூர்மா மற்றும் அமித் குமார் சரோஹா இரவு 10.50 மணி

பாரா வில்வித்தை: ஆண்களுக்கான தனிநபர் ரிகர்வ் (வெண்கலப்பதக்கத்திற்கான போட்டி தகுதிபெற்றால்) ஹர்விந்தர் சிங் இரவு 10.57 மணி

பாரா தடகளம்; பெண்கள் 100மீ டி12 (ஹீட்) சிம்ரன் இரவு 11.03 மணி

பாரா வில்வித்தை: ஆண்களுக்கான தனிநபர் ரிகர்வ் (இறுதிப்போட்டி தகுதிபெற்றால்) ஹர்விந்தர் சிங் இரவு 11.14 மணி



# 'இன்டர்காண்டினென்டல்' கால்பந்து தொடர்; இந்தியா மொரீசியஸ் ஆட்டம் 'டிரா'

இந்தியாவின் கச்சிபவுலியில் (தெலுங்கானா) 'இன்டர்காண்டினென்டல்' கால்பந்து தொடர் நேற்று துவங்கியது. இந்தியா, சிரியா, மொரீசியஸ் என மூன்று அணிகள் விளையாட உள்ளன.



நேற்று நடந்த முதல் போட்டியில் இந்தியா மொரீசியஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொண்டனர்.

ஆனால் வீரர்கள் எடுத்த முயற்சிகளுக்கு இறுதிவரை பலன்கிடைக்கவில்லை. இறுதியில் இந்த ஆட்டம் கோல் ஏதுமின்றி 00 என டிராவில் முடிந்தது.

# அஜித் அகர்கர் தலைமையிலான இந்திய தேர்வுக்குழுவில் மாற்றம் பி.சி.சி.ஐ அறிவிப்பு



சமீபத்தில் நடைபெற்ற டி20 உலக கோப்பைக்கு முன்பாக அஜித் அகர்கர் இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தேர்வுக்குழு தலைவராக பொறுப்பேற்றார். அவரது தேர்வின் கீழ் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீஸ் சென்று விளையாடிய இந்திய கிரிக்கெட் அணி டி20 உலக கோப்பையை கைப்பற்றி வரலாறு படைத்தது.

இந்த சூழ்நிலையில் இந்திய தேர்வுக்குழுவின் உறுப்பினராக ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருந்த சலில் அன்கோலாவுக்கு பதிலாக, இந்திய முன்னாள் விக்கெட் கீப்பர் அஜய் ரத்ரா தேர்வுக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதாக பி.சி.சி.ஐ அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

முன்னாள் இந்திய விக்கெட் கீப்பர்பேட்டரான ரத்ரா இந்தியாவுக்காக 6 டெஸ்ட் மற்றும் 12 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்; டெய்லர் பிரிட்ஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஜெர்மனியில் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸ் உடன்மோதினார்.

இந்த ஆட்டத்தில் எளிதில் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ஸ்வெரேவ் 6-7 (2-7), 6-3, 4-6, 6-7 (3-7) என்ற செட் கணக்கில் டெய்லர் பிரிட்ஸிடம் அதிர்ச்சி தோல்வி கண்டார். அபாரமாக செயல்பட்டு வெற்றி பெற்ற டெய்லர் பிரிட்ஸ் அரையிறுதிக்கு முன்னேறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.